தொழில் பயிற்சிக்கூடங்களை நடத்துபவர்களையும் மாநில அரசு அழைத்துப் பேசியது. அந்த அந்த மாவட்டத்திலே குழு அமைத்து, அந்த அந்த மாவட்டத்திலே இருக்கிற இண்டஸ்டிரியல் டிரெயினிங் இன்ஸ்டிட்டியூட் நிர்வாகிகளையும், தொழிலதிபர்களையும் உள்ளடக்கி, எப்படிப்பட்ட டிரேட்ஸுக்கு, எந்தெந்த தொழிற் சாலைகளிலே வாய்ப்பு இருக்கிறது என்று ஆராய்ந்து, அந்தந்த பயிற்சியை அந்தந்த தொழிற்சாலைகளிலே கொடுக்க வேண்டு மென்று அரசு ஏற்பாடு செய்தது.

DR. H. V. HANDE: Have this Government got in touch with other progressive States like Maharashtra, Punjab and Haryana to find out whether it is practised there and if so, whether this Government are prepared to implement it as early as possible and if possible in the next year itself?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது நடைபெற்று ஓராண்டு இருக்கும். ஆகவே, ஏற்கனவே, இதுநடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இதைச் செய்வது என்று முடிவு செய்திருக்கிறோம். இப்பொழுது பயிற்சி பெற்றிருக்கிறவர் களிலே வேலையில்லாமல் பல்லாயிரக்கணக்கானவர்கள் மத்தியில் தேக்கம் இருக்கிறது. எதிர் காலத்தில் எப்படிப்பட்டவர் களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும், எந்த எந்தத் துறையிலே பயிற்சி கொடுக்கவேண்டுமென்று ஆங்காங்குள்ள மாவட்ட தேவை களை ஆராய்ந்து டைரக்டர் ஆப் எம்ப்ளாய்மென்ட் அண்ட் டிரெய் னிங் எந்தெந்த ஐ.டி.ஐ. நிலையங்களுக்கு இந்த டிரேட்ஸ் மாற்றம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது இப்பொழுதே செயல்பட்டு வருகிறது.

Release of water from Mettur Dam

*195 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any prospect of early release of water from Mettur for irrigation this year; and

(b) if so, the probable date by which water would be released?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) பாசனத்திற்காக, மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து 7—7—1972-இல் நீர் திறந்து விடப்பட்டது.

1972 ஆகஸ்ட் 19]

DR. H. V. HANDE : Sir, has the attention of the Government been drawn to the fact that the level of water in Mettur is very low and if so, what steps the Government are going to take to prevent the consequences of such a low level in the deltaic areas. Also, is it not a fact that chronically the ryots in the delta area suffer on that account and it is only after they embark on an agitation that water is released. So, may I know why there is an inordinate delay in the release of water from the Mettur Dam to the deltaic areas?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சாதாரணமாக, மேட்டூர் ரிசர்வாயரிலிருந்து ஜூன் மாதம் 12-ம் தேதி தண்ணீர் திறந்துவிடவேண்டுமென்ற உத்தாவு இருந்தாலும் நிலைமையைப் பரிசிலித்துப் பார்த்து தேவையான தண்ணீர் தேங்கிய பிறகுதான் நீர் திறந்து விடப்படுகிறது. 27—6—1972-ம் தேதி 72.09 அடி தண்ணீர் வந்தபிறகு, 7—7—1972-ல் தண்ணீர் விடப்படலாம் என்று தலைமைப்பொறியாளருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது தண்ணீர் குறைவாக இருந்தாலும் பின்னர் சமாளித்துக்கொள்ளலாம் என்ற நிலையில் தண்ணீர் விடலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஆரணி ஆற்றின் குறுக்கே அணை

* 196 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியபாளையம் அருகில் ஆரணி ஆற்றின் குறுக்கே சிறிய அணைக்கட்டு அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் முதல் நிலை ஆய்வில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தப் பெரிய பாளையம் திட்டத்தை மக்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் நடந்துவந்து பார்வையிட்டார்கள். எந்தத் தேதிக்குள் இந்தத் திட்டம் முடிவடையும் என்று அறிவிப்பார்களா ?